நல்லூர் இளை நூலகம்
மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a News Paper
பக்கங்கள் 04
விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM
Peoples Daily
மக்கள் தினசரி

நாதம் 03
திருவள்ளுவர் ஆண்டு 2023
ஐப்பசி 02
(18 - 10 - 1992)
ஞாயிற்றுக்கிழமை
ஓசை 243

## கட்டுநிதி கிடைப்பதில் தாமதம்
## அரச நிர்வாகம் ஸ்தம்பிக்கும்

யாழ். மாவட்டத்திற்கான கட்டுநிதியை அரசு வழங்குவதில் மேலதிக காலதாமதம் தோன்றியுள்ளது இதனால் குடாநாட்டில் அரச நிர்வாகம் ஸ்தம்பிதமடையும் நிலை உருவாகியுள்ளது. இம்மாவட்டத்தில் உள்ள அரச செயலகம் மற்றும் அரச திணைக்களங்களிற்கான கட்டுநிதி கிடைப்பதில் நீண்ட காலதாமதம் ஏற்பட்டுள்ளதுடன் தொடர்ந்தும் அரசின் கட்டுநிதி கிடைக்குமா என்ற நிச்சயமற்ற நிலையும் தோன்றியுள்ளது. யாழ். செயலகத்திற்குத் தேவையான கட்டுநிதியை அரசு அனுப்பிவைப்பதை இவ்வருட ஆரம்பத்திலேயே நிறுத்திவிட்டது. இதன் பின்னர் இம்மாவட்டத்திற்கு அத்தியாவசியசேவைகள் ஆணையாளரினால் அனுப்பிவைக்கப்பட்ட அத்தியாவசியப்பொருள்களை விற்பனைசெய்வதினால் பெறப்பட்ட பணம் இம்மாவட்டத்திற்கான அரசநிர்வாகச் செலவுக்குப்பயன்படுத் (4-ம் ப. பார்க்க

## யாழ் வான்பரப்பில் சுப்பர்சொனிக் விமானங்கள்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா விமானப்படையினரின் இரண்டு ''சுப்பர் சொனிக்'' விமானங்கள் நேற்றுக்காலை பேரிரைச்சலுடன் யாழ். குடாநாட்டினை வட்டமிட்டு நோட்டமிட்டன. பல தடவைகள் இவ்விமானங்கள் இப்பகுதிகளை வட்டமிட்டதைத் தொடர்ந்து மக்கள் பாதுகாப்பினை நாடி ஓடினர்

நேற்றுக் காலை 8 30 மணியளவில் கல்முனைப் பக்கமாக விரைந்துவந்த விமானங்கள் 15 நிமிடங்கள் வரை வலிசாமப்பகுதி வான்பரப்பில் காணப்பட்டன

திடீரென ஒரு விமானம் பேரிரச்சலுடன் தாழப்பறந்ததாயினும் குண்டு வீச்சு எதனையும் நடாத்தியதாக தெரியவில்லை. [பா],[21]

## லெப். கேணல் சுபன் நினைவுக் கூட்டம்

(பூநகரி)

பூநகரி பள்ளிக்குடா இராணுவ மினிமுகாம் வெற்றிகர தகர்ப்பின்போது வீரச்சாவு அடைந்த மன்னார் மாவட்ட சிறப்புத் தளபதி லெப்டினன்ட் கேணல் சுபன் அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலிக் கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளது.

இந்த அஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர். இந் நிகழ்வில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

இந்த அஞ்சலி நிகழ்வினை சிறப்புற நடாத்த மன்னார் பூநகரி படகுச்சேவை ஊழியர்கள் ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மகசீன் சிறையில் 230 தமிழ் கைதிகள்

(வவுனியா)

கொழும்பு மகசீன் சிறைச்சாலையில் பெண்கள் உட்பட 230 தமிழ்க் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று விடுதலை பெற்று வந்தவர்கள் தெரிவித்தனர்.

தடுத்து வைக்கப்பட்டவர்களில் பலர் வடபகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் இவர்கள் தடைசெய்யப்பட்ட பொருள்களை வடபகுதி நோக்கி கொண்டு செல்ல முயன்றபோதே கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (தி)

## அகதிகளாக வந்தாலும் இந்திய வம்சாவளியினரே

### - செல்லச்சாமி

(சென்னை)

''இலங்கையிலிருந்து அகதிகளாக இந்தியா வந்தாலும் இந்திய வம்சாவளி மக்களை அகதிகள் பட்டியலுக்குள் சேர்ப்பது முறையல்ல. இலங்கையில் அவர்கள் வாழ்ந்து வரி

களாக கருதி நடத்தக் கூடாது.''

இவ்வாறு கைத்தொழில் ராஜாங்க அமைச்சர் எம் எஸ். செல்லச்சாமி இந்தியா

# தெரிவுக் குழுவின் தீர்வுத் திட்டம்:
# தமிழர் பிரச்சினையைத் தீர்க்காது

## கொழும்பு தமிழ்க் குழுக்கள் அதிருப்தி

[கொழும்பு]

தமிழரின் தேசிய இனப்பிரச்சினைத் தீர்விற்கென பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவர் மங்கள முனசிங்கா முன்வைத்திருக்கும் தீர்வுத்திட்டம் கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களுக்கு பெரும் ஏமாற்றத்தையும், அதிருப்தியையும் அளித்துள்ளது. ''இத்தீர்வுத்திட்டம் தமிழர் பிரச்சினையைத் தீர்க்கப் போதுமானதாக இல்லை என்பதோடு, ஏமாற்றம் அளிப்பதாகவுமுள்ளது'' என தமிழ்க் குழுவின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

தமிழர்தேசியபிரச்சினைக்கு இரு மாகாண சபைகளையும், ஒரு பிரதேச சபையையும் கொண்ட தீர்வுத் திட்டம் ஒன்றை பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவர் மங்கள முனசிங்கா முன்வைத்ததும், அவை தமிழ்க் குழுக்களின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்டதும் தெரிந்ததே. இதுதொடர்பாகவே தமிழ்க் குழுக்கள் தமது எதிர்ப்பையும் ஏமாற்றத்தையும் வெளிப்படுத்தியுள்ளன.

''இனப்பிரச்சினைக்கு உகந்த தீர்வாக இப்பொழுது தமிழ்க் குழுக்களிடம் முன்வைக்கப்பட்டிருக்கும் யோசனைகள் எங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. நடப்பவையைப்பார்த்தால் எல்லாம் முன்னுக்குப்பின் முரண்பாடாகவே உள்ளன'' என தமிழ்க் குழு ஒன்றின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

''இனப்பிரச்சினைக்கு உகந்த தீர்வு ஒன்றை காணும் முகமாக பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் ஐ. தே கட்சி, சுதந்திரக்கட்சி தலைவர்கள் கடந்த ஏழாம் திகதி எங்கள் தூதுக்குழுவை சந்தித்து பேசியபோது பல முன்னேற்றகரமான யோசனைகளை தெரிவித்தனர். ஆனால் இப்பொழுது முன்வைக்கப்பட்டிருக்கும் யோசனைகளைப் பார்த்தால்

(4-ம் பக்கம் பார்க்க)

## மீட்புநிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கான மீட்புநிதி சேகரிப்பு நாளை பிற்பகல் 2-00 மணி தொடக்கம் 5-00 மணி வரை மல்லாகம் மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெறும் என தமிழீழ விடுதலைப் புலிகள் நிதித்துறையினர் தெரிவித்துள்ளனர்.

### திருமலை கிராமங்களுக்கு செல்ல

## சர்வதேச நிறுவனங்களுக்கு அரசு அனுமதி மறுப்பு

சிறிலங்கா இராணுவத்தின் பூரண ஆக்கிரமிப்பிற்கு உட்பட்டிருக்கும் திருமலை நகர் தவிர்ந்த ஏனைய இடங்களுக்கு செல்ல செய்தியாளர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், வெளிநாட்டு பிரதிநிதிகள் ஆகியோருக்கு சிறிலங்கா அரசு அனுமதி மறுத்து வருகின்றது

இடைக்கிடையே பாதிக்கப்பட்ட தமிழ்க் கிராமங்களுக்குச் செல்லும் செஞ்சிலுவைச் சங்க மருத்துவக் குழுவினரைக்கூட அனுமதிப்பதை படையினர் குறைத்துள்ளனர்.

திருமலையில் வழமைநிலை உள்ளதென்பதையும் சிவில் நிர்வாகம் சரிவர செயல்படுகிறது என்பதையும் காட்ட

வையிட சர்வதேச பிரதிநிதிகளுக்கும், செய்தியாளர்களுக்கும் அனுமதி வழங்கப்படுகிறது.

திருமலை நகர் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் பாடசாலைகள், அரச அலுவலகங்கள் என்பன ஒழுங்காக இயங்குவதில்லை. ஆசிரியர்களும், மாணவர்களும் படையினரால் அடிக்கடி கைது செய்யப்படுகின்றனர்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட தளபதி திரு. வசந்தன் அவர்கள் தெரிவித்தார்

## 36 கோடி ரூபா செலவில் 4 கடற்படை படகுகள்

### டொக்யாட் நிறுவனம் கட்டும்

(கொழும்பு)

சிறிலங்கா கடற்படைக்கு நான்கு அதிவேக ரோந்துப் படகுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு கொழும்பு டொக்யாட் தனியார் நிறுவனம் 36 கோடி ரூபா ஒப்பந்தம் ஒன்றை அரசுடன் செய்துள்

ற்கான தொழில் நுட்ப அறிவைப் பிரான்ஸ் வழங்கவுள்ளது. முதல் இரு படகுகளும் பிரான்சில் கட்டப்படும்.

சிலோன் மரையின் ஒப்பிரான்ஸ் நிறுவனம் சிறிலங்கா பொறியியலாளர்களுக்கும், தொழில் நுட்பவியலாள

தளங்களில் பயிற்சி வழங்கிய பிறகு மற்றிரு படகுகளும் கொழும்பிலேயே கட்டப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நான்கு படகுகளும் 1993க் கிடையில் சிறிலங்கா கடற்படைக்குக் கையளிக்கப்பட

## பெண்மணி காயம்

முன ங்கா முன்வைத்ததும், அவை தமிழ்க் குழுக்களின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்டதும் தெரிந்ததே. இதுதொடர்பாகவே தமிழ்க் குழுக்கள் தமது எதிர்ப்பையும் ஏமாற்

தில் ஆழ்த்தியுள்ளது. நடப்பவையைப்பார்த்தால் எல்லாம் முன்னுக்குப்பின் முரண்பாடாகவே உள்ளன'' என தமிழ்க் குழு ஒன்றின் பேச்சாளர் ஒரு

திகதி எங்கள் தூதுக்குழுவை சந்தித்து பேசியபோது பல முன்னேற்றகரமான யோசனைகளை தெரிவித்தனர். ஆனால் இப்பொழுது முன்

## 230 தமிழ் கைதிகள்

(வவுனியா)

கொழும்பு மகசீன் சிறைச்சாலையில் பெண்கள் உட்பட 230 தமிழ்க் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று விடுதலை பெற்று வந்தவர்கள் தெரிவித்தனர்.

தடுத்து வைக்கப்பட்டவர்களில் பலர் வடபகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் இவர்கள் தடைசெய்யப்பட்ட பொருள்களை வடபகுதி நோக்கி கொண்டு செல்ல முயன்றபோதே கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (தி)

## அகதிகளாக வந்தாலும் இந்திய வம்சாவளியினரே

### - செல்லச்சாமி

(சென்னை)

''இலங்கையிலிருந்து அகதிகளாக இந்தியா வந்தாலும் இந்திய வம்சாவளி மக்களை அகதிகள் பட்டியலுக்குள் சேர்ப்பது முறையல்ல. இலங்கையில் அவர்கள் வாழ்ந்து வரினும் இந்தியாவே அவர்களது தாய் நாடு. அவர்களதுசொந்த நாட்டில் அவர்களை அகதிகளாக கருதி நடத்தக் கூடாது.''

இவ்வாறு கைத்தொழில் ராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி இந்தியா சென்றிருந்தவேளை தெரிவித்திருந்தார்.

## போட்டிப் பரீட்சையை யாழ். நடாத்தக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் பொது எழுதுநர் சேவையில் இரண்டாம் வகுப்பின் ''அ'' பிரிவிற்கு நியமனம் பெறுவதற்கான போட்டிப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துமாறு பரீட்சார்த்திகள் யாழ். கல்விப் பணிப்பாளரைக் கேட்டுள்ளனர்.

மேற்படிபரீட்சை கொழும்பிலேயே வழமையாக நடைபெற்றுவருகிறது. தற்பொழுது கொழும்பு செல்வதில் உள்ள இடர்களைக் கவனத்திற் கொண்டு இப்பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடாத்துமாறு பரீட்சார்த்திகள் கேட்டுள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழர் ஆசிரியர் சங்க செயலாளரின் கோரிக்கை பணிப்பாளரால் நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட மேன் முறையீட்டை யாழ். கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் நிராகரித்து விட்டதுடன், உடனடியாக யாழ். சன்மார்க்க மகாவித்தியாலயத்தில் அதிபராகப் பதவியேற்குமாறும் பணித்துள்ளார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. மகாசிவத்திற்கு தேசிய கல்வி நிறுவகத்தால் வழங்கப்பட்ட தொலைக் கல்விப் போதனாசிரியர் பத

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 36 கோடி ரூபா செலவில் 4 கடற்படை படகுகள்

### டொக்யாட் நிறுவனம் கட்டும்

(கொழும்பு)

சிறிலங்கா கடற்படைக்கு நான்கு அதிவேக ரோந்துப் படகுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு கொழும்பு டொக்யாட் தனியார் நிறுவனம் 36 கோடி ரூபா ஒப்பந்தம் ஒன்றை அரசுடன் செய்துள்ளது.

முதன் முறையாக கப்பலின் உடற்பகுதி அலுமினியத்தினால் செய்யப்படும் என்றும், இது சர்வதேச தரத்திற்கமைய இருக்கும் என்றும் நிறுவனத்தின் தலைவர் ரி. பீரிஸ் தெரிவித்தார்.

பிரான்ஸ் - கொழும்பு டொக்யாட் நிறுவனத்தின் கூட்டுழைப்பில் இந்தப் படகுகள் கட்டப்படவுள்ளன இதற்கான தொழில் நுட்ப அறிவைப் பிரான்ஸ் வழங்கவுள்ளது. முதல் இரு படகுகளும் பிரான்சில் கட்டப்படும்.

சிலோன் மரைனின் ஒப் பிரான்ஸ் நிறுவனம் சிறிலங்கா பொறியியலாளர்களுக்கும், தொழில்நுட்பவியலாளர்களுக்கும் தமது வேலைத்தளங்களில் பயிற்சி வழங்கிய பிறகு மற்றிரு படகுகளும் கொழும்பிலேயே கட்டப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நான்கு படகுகளும் 1993க்கிடையில் சிறிலங்கா கடற்படைக்குக் கையளிக்கப்படவுள்ளன.

## இந்த சந்ததி யுத்தத்தை ஒரு அம்சமாக ஏற்றுள்ளது

### - பேராசிரியர் பீரிஸ்

பாலர் வகுப்புப் பிள்ளை ஒன்றை புலியின் படத்தை வரையச் சொன்னார்கள். பிள்ளை ப்பாக்கியும் கையுமாக உள்ள ஒரு மனிதனைக் கீறிக் காட்டியது என்று கொழும்புப் பல்கலைக் கழக வேந்தர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் கூறினார்.

கொழும்பு சகன்யா நிலையத்தில் உலக உள வளத் தினத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பேசிய பேராசிரியர் பீரிஸ் இவ்வாறு கூறினார்.

வடக்கு-கிழக்கு யுத்தத்தையும் அதனால் ஏற்படும் விளைவுகளையும் பற்றிப் பேசிய பேராசிரியர் பீரிஸ், இந்தச் சந்ததி முழுவதுமே அதன் வளர்ச்சிப் போக்கில் ஓர் அம்சமாகப் போர்ச் சூழலை ஏற்றுக் கொண்டே வளர்கிறது என்றார்.

எமது பல்கலைக் கழகக் கல்வி முறை இருப்பிட வசதி போன்ற ஏனைய அடிப்படைத் தேவைகளை வழங்கத் தவறிவிட்டது. இதனால் வாழ்க்கையில் விரக்தியுற்ற பலர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள். மன அழுத்தம்; வேலையில்லாத் திண்டாட்டம், சுற்றுச் சூழப் பிரச்சினை ஆகிய மூன்றுமே உடனடியாகக் கவனம் செலுத்தப்பட வேண்டியவைகளாக இனம் காணப்பட்டுள்ளன என்றும்,

6,00,000 சனத் தொகையைக் கொண்ட லிவர்பூல் நகரில் மாத்திரம் இலங்கையைச் சேர்ந்த நான்கு துறைசார்ந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நடவடிக்கை திட்டமிடல் தளபதிகளுக்கு சுமையாம்

### - ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

முப்படைகளின் தளபதிகளுக்கும் திட்டமிடும் பணி பெரும் சுமையாக இருந்ததால் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடஅவர்களுக்குப் போதிய அவகாசம் கிடைக்கவில்லை என்பதை எமது ஆறுமாத கால அனுபவம் காட்டுகிறது. திட்டமிடும் பொறுப்பானது பொலிஸ்மா அதிபருக்கும் முப்படைகளின் தளபதிகளுக்கும் இளைப்பாறிய இராணுவத் தலைவர்களின் பரிந்துரைக்கு அமைவாகவே ஜனாதிபதியினால் வழங்கப்பட்டது.

இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேக்கடுவ, பிரிகேடியர் விமலரெட்னாவின் மரணங்களுக்குப் பிறகு மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வாவுக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது இந்த பதவி உயர்வின் மூலம் மீளவும் கூட்டுப்படை நடவடிக்கைச் செயலகம் அதன் அதிகாரங்களை பெற்றுள்ளது என்றார் அமைச்சர்.

## விமான நடமாட்டம் அதிகரிப்பு

யாழ் குடாநாட்டின் வான் பரப்பில் சிறிலங்கா விமானப் படையின் விமானங்களின்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஜே. வி. பி. சந்தேகநபர் பண்டாரவளையில் கைது

பண்டாரவளை பொலிசார் ஜே வி. பி. கிளர்ச்சி நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டவர் என சந்தேகிக்கப்படும் ஒருவரைக் கைதுசெய்துள்ளனர் எனக் கூறப்படுகிறது. இவர் பத்துக் கொலைகளுடன் சம்பந்தப்பட்டவரெனத் தெரியவருகிறது.

வித்தியோதய பல்கலைக் கழக பட்டதாரியான இவர் நான்கு பெரும் கொள்ளைகளிலும் சம்பந்தப்பட்டவ

(4-ம் பக்கம் பார்க்க)

## வங்கிகள் பணத்தை ஏற்றுக்கொள்ள மாத இறுதிவரை அவகாசம்

வங்கிகள் பணத்தை ஏற்றுக் கொள்வதில் உள்ள கட்டுப்பாட்டுக்கு எதிராகவும் பணத்தை ஏற்றுக் கொள்ளும்படி கோரியும் நடாத்தப்பட இருந்த மறியற் போராட்டம் பிற்போடப் பட்டிருக்கின்றது.

மேற்படி நடைமுறைகள் குறித்து மீளாய்வு செய்து முடிவெடுப்பதற்காக இம்மாதம் 31ஆம் திகதி வரை கால அவகாசம் தரும்படி வங்கி அதிகாரிகள் கோரியதை அடுத்து மேற்படி போராட்டம் 31ஆம் திகதிவரை பிற்போடப்பட்டிருக்கிறது.

யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபை அதிகாரிகளுக்கும் வங்கி அதிகாரிகளுக்கு மிடையிலான சந்திப்பின் போது மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

## அரசு அனுமதி மறுப்பு

சிறிலங்கா இராணுவத்தின் பூரண ஆக்கிரமிப்பிற்கு உட்பட்டிருக்கும் திருமலை நகர் தவிர்ந்த ஏனைய இடங்களுக்கு செல்ல செய்தியாளர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், வெளிநாட்டு பிரதிநிதிகள் ஆகியோருக்கு சிறிலங்கா அரசு அனுமதி மறுத்து வருகின்றது

இடைக்கிடையே பாதிக்கப்பட்ட தமிழ்க் கிராமங்களுக்குச் செல்லும் செஞ்சிலுவைச் சங்க மருத்துவக் குழுவினரைக்கூட அனுமதிப்பதை படையினர் குறைத்துள்ளனர்.

திருமலையில் வழமைநிலை உள்ளதென்பதையும் சிவில் நிர்வாகம் சரிவர செயல்படுகிறது என்பதையும் காட்ட திருமலை நகரை மட்டும் பார்வையிட சர்வதேச பிரதிநிதிகளுக்கும், செய்தியாளர்களுக்கும் அனுமதி வழங்கப்படுகிறது.

திருமலை நகர் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் பாடசாலைகள், அரச அலுவலகங்கள் என்பன ஒழுங்காக இயங்குவதில்லை. ஆசிரியர்களும், மாணவர்களும் படையினரால் அடிக்கடி கைது செய்யப்படுகின்றனர்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட தளபதி திரு. வசந்தன் அவர்கள் தெரிவித்தார்

## பெண்மணி காயம்

பலாலி சிறிலங்கா இராணுவமுகாம் காவலரணில் இருந்து ஈவினைப் பகுதியை நோக்கி நடாத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பெண்மணி ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்று இரவு நடாத்தப்பட்ட இத்துப்பாக்கிப் பிரயோகத்தினால் செல்லம்மா என்ற பெண்மணியே காயமடைந்துள்ளார்.

## வெள்ளைப் பிரம்பு தினம்

யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் யாழ். லயன் கழக ஆதரவுடன் நடத்தும் சர்வதேச வெள்ளைப்பிரம்பு தின விழா இன்று காலை 9 00 மணிக்கு யாழ் பரியோவான்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் தடுப்புக்காவலில் உள்ள 51தமிழ்க்கைதிகள் குறித்து ஐ. நா. விடம் முறைப்பாடு

[கொழும்பு]

சிறிலங்கா பொலிஸ் தலைமைக் காரியாலயத்தின் ஆறாம் மாடி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள 51 தமிழர்கள் எதுவித அடிப்படை வசதியுமின்றி இருப்பதாகவும் இதுமனித உரிமைகளை மீறும் செயல் எனவும் கொழும்பிற்கு வந்துள்ள ஐ. நா. மனித உரிமைகள் தூதுக்குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள மகஜர் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது

சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக விரிவுரையாளர் கே. எல். இளையசிங்க, வர்த்தகப் பிரிவுமாணவரான ஏ.டி. ஆலானந்த சமரநாயக்கா, கதிர்காமம் மக்கள் வங்கி லிகிதர் டபிள்யூ. எல். குணபால, மலையக மக்கள் முன்னணித் தலைவர், செயலாளர் உட்பட வேறும் சிலர் இந்த மகஜரில் கையெழுத்திட்டுள்ளனர்.

தற்பொழுது ஆறாம் மாடியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 54 பேரில் 51 பேர் தமிழர்கள் ஆவர் அவர்களில் நால்வர் பெண்களாவர்.

இவர்களுக்கு தண்ணீர், மலசலகூடம், இடவசதி ஆகியவை கூட சரிவரக் கிடைப்பதில்லை என தெரிவிக்கப்படுகிறது.

மரமின்றிப் போனால்
மழையின்றிப் போகும்

## வரி விளம்பரம்

### மாணவருக்கான கையேடு

''பரீட்சைகளுக்கான ஆயத்தமும் அவற்றை வெற்றிகரமாக எதிர் கொள்ளலும்'' உளவியல் சஞ்சிகை தனிப்பிரதி - ரூபா 12.00. தேவையானோர் பதினைந்து ரூபா முத்திரை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம் முகவரி: ஜோ. எக்கட்டன் 19/3 கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி எதிர் ஒழுங்கை- சுண்டுக்குளி சபாரிசிலும் பெற்றுக் கொள்ளலாம்.

(சி-5231)

### தையல் இயந்திரங்கள்

தீபாவளியை முன்னிட்டுச் சகலவிதமான தையல் இயந்திரங்களையும், உதிரிப்பாகங்களையும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளவும், பழுதடைந்த சகலவிதமான தையல் இயந்திரங்களையும் உடனுக்குடன் எமது நிலையத்திலும், உங்கள் வீடுகளிலும் வைத்துத் திருத்திக் கொள்ளவும், உங்கள் தையல் இயந்திரங்களை விற்றுக் கொள்ளவும், நாடுங்கள். தையல் இயந்திர நிலையம் கண்டி வீதி, சாவகச்சேரி.

(சி-5232)

### டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள். சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு. சகல கடிகாரங்கள், றேடியோக்கள் வாங்கப்படும், விற்கப்படும். டில்காவாச் வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில் யாழ்ப்பாணம். (சி-5152)

### விற்பனைக்கு

நல்லின ஜிப்சன் புறாக்கள் விற்பனைக்குண்டு. (கறுப்பு ஜிப்சன், பிறவுண் ஜிப்சன்) ந. வரதராசா முருகமூர்த்தி கோயிலடி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (சி-5228)

நல்ல நிலையில் உள்ள சொகுசான வில்தகடுடன் கூடிய வண்டில் கூடாரத்துடன் விற்பனைக்கு உண்டு. ந வாதராசா முருகமூர்த்தி கோயிலடி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (சி-5229)

### தவறிவிட்டது

ஜெகதீசன் சசிகலாவினுடைய 715482088V இலக்கமுள்ள தேசிய அடையாள அட்டை அடங்கிய பேர்ஸ் சுன்னாகம் புகையிரத நிலையத்திற்கும் மருதனார்மடத்துக்கும் இடையில் பிரதான வீதியில் 13. 10. 92 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சயவு செய்து சுன்னாகம் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம். (3486)

### மிருதங்க அரங்கேற்றம்

(கொழும்புத்துறை)

செல்வன் பரஞ்சோதி .ரதிரூபனின் மிருதங்க அரங்கேற்றம் இன்று 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடைபெறும்.

(24)

### கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ். ஊனமுற்றோர் புனர்வாழ்வுச்சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் சங்கத் தலைவர் டாக்டர் எஸ். சண்முகலிங்கம் தலைமையில் இன்று 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30 மணிக்கு இல: 16, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளியில் உள்ள சங்கப்பணிமனையில் நடைபெறும்.

இக்கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திரு கா. மாணிக்கவாசகர், யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு வே. பொ. பாலசிங்கம், கைதடி நவீல்ட் பாடசாலை அதிபர் திரு எஸ் கோபாலகிருஸ்ணன், விழிப்புலன் அற்றோர் சங்கத் தலைவர் திரு ஏ ரவீந்திரன் ஆகியோர் பங்குபற்றிச் சிறப்பிக்க உள்ளனர். (24)

### சீனி விநியோகம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் அதன் பாவனையாளர்களுக்கு சீனி, மண்ணெண்ணெய் என்பன விநியோகிக்கப்படுகின்றன.

பங்கீட்டுஅட்டை ஒன்றிற்கு ஒரு கிலோ சீனிஇருபத்தியேழு ரூபா எழுபத்தைந்து சத வீதமும், இரண்டு லீற்றர் மண்ணெண்ணெய் லீற்றர் முப்பத்தெட்டு ரூபா வீதமும் சங்கத்தின் கே கே எஸ் வீதியில் உள்ள கிளைகளில் விநியோகிக்கப்படுவதாக சங்கப் பதில் பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார்.

## நினைவு கூருகின்றோம்...

## 1992-10-18

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் முனைக்காட்டுப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**குகன்** ( வைரமுத்து கிருபாகரன் - முனைக்காடு, கொக்கட்டிச்சோலை - மட்டக்களப்பு )

கோப்பாய்ப்பகுதியில், இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**அலன்** (சிதம்பரநாதன் நிசாந்தன் - 95, ராசபாதை, திருநெல்வேலி - யாழ்)

**நோயல்** (பியதாசசுகந்தன் - சின்னப்பண்டிவிரிச்சான் - மன்னார்)

இருபாலைப் பகுதியில், இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**விக்ரர்** (ஆறுமுகம் தவராசா - கோண்டாவில் கிழக்கு - யாழ்)

1988 ஆம் ஆண்டு ஸ்கந்தபுரம் - அக்ராயன் வீதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**மோகன்** (விஸ்வலிங்கம் சிவலிங்கநாதன் - 2 -ஆம் படிவம், வவுனிக்குளம், மாங்குளம் - முல்லைத்தீவு)

**சுமித்** (சண்முகம் - நெடுங்கேணி - மணலாறு)

ஸ்கந்தபுரத்தில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**கமீத்** (முத்தன் ஜெகசோதி - அச்சுவேலி தெற்கு-யாழ்)

யாழ்- கொக்குவில், சம்பியன் ஒழுங்கையில், இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**கென்றி** (பற்றிக் எல்மோர் அன்ரன் றொபேட் (மக்சி) - 62, கென்றி வீதி, குருநகர் - யாழ்)

மானிப்பாயில், தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட-

நாட்டுப் பற்றாளரான-

**சின்னத்துரை சற்குணராசா** (ராஜன் குளிர்பான நிலையம், மானிப்பாய் - யாழ்)

1990ஆம் ஆண்டு, பலாலி இராணுவ முகாமைச் சூழவுள்ள பகுதிகளில் 2-வது நாளாக சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட 'ஒப்பரேசன் ஜெயசக்தி' நடவடிக்கையின் போது, பலாலியில் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**2-ம்லெப் தமிழ்ச்செல்வன்** (சவரிப்பிள்ளை வசந்தன் அலோசியஸ் - மாளிகைப்பிட்டி, முருங்கன், மன்னார்)

**கப்டன்கந்தையா**(கந்தசாமி உதயகுமார் - கரணவாய் தெற்கு, கரவெட்டி, யாழ் )

**நெல்சன்** (வடிவேலு இலச்கணகுமார் - செல்வபுரம், பூநகரி, மன்னார்)

வசாவிளான் பகுதியில், சிறிலங்காப்படையினரின் 'ஒப்பரேசன் ஜெயசக்தி' நடவடிக்கையின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**சுகந்தன்** (சின்னத்தம்பி சிவயோகநாதன் - தர்மக்கேணி, பளை. கிளிநொச்சி)

பலாலிப்பகுதியில், சிறிலங்காப்படையினரின் 'ஒப்பரேசன் ஜெயசக்தி' நடவடிக்கையின்போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**லெப் மரியதாஸ்** (பாலச்சந்திரமூர்த்தி காந்திதாஸ் அமெரிக்கன்மிசன் பாடசாலை வீதி, கொண்டல்கட்டை, வல்வெட்டித்துறை, யாழ் )

**ஜெனி** (சின்னப்பொடியன் ஜெகதீஸ்வரன் - கொத்திவேலி, கைதடி, யாழ்.)

**தாசன்** (கந்தசாமி சர்வானந்தம் - கணபதியப்புலம், கோப்பாய் வடக்கு, யாழ்.)

**கிசோபன்** (செல்லையா சற்குணானந்தன் - இருபாலை, யாழ்.)

கட்டுவன் பகுதியில், சிறிலங்காப்படையினரின் 'ஒப்பரேசன் ஜெயசக்தி' நடவடிக்கையின்போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**லெப் ரகீம்** (பொன்னுச்சாமி விஜயமுரளி - கச்சாய் தெற்கு, கொடிகாமம் - யாழ்.)

தெல்லிப்பளையில், சிறிலங்காப்படையினரின் 'ஒப்பரேசன் ஜெயசக்தி' நடவடிக்கையின் போது உலங்குவானூர்தியிலிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**ரகு** (கந்தசாமி முருகானந்தரகு பத்தாளை, அளவெட்டி மத்தி - யாழ்)

மட்டு - வந்தாறுமூலைப்பகுதியில், சிறிலங்கா இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்.

உரும்பராய், மல்லாகம் ஆகிய பகுதிகளில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ச்சிறுமி மற்றும், 2 தமிழ்ப்பெண்கள்.

1991-ம் ஆண்டு மண்கும்பான் பகுதியில், சிறிலங்காப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**2-ம்-லெப். ஜீவன்** (கனதலதீஸ்வரன் - புத்தூர் - யாழ்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-5239)

வாடிக்கையாளர்! வியாபாரிகளுக்கு!

உங்கள் தேவைகளுக்கு உகந்த வகையில்

எம்மிடம்: மொத்தமாகவும் சில்லறையாகவும்

அரிசி தரம் - 1 அரிசி தரம் -2 பெற்றுக்கொள்ளலாம்

வாடிக்கையாளர்! வியாபாரிகளுக்கு!

## உங்கள் தேவைகளுக்கு உகந்த வகையில்

எம்மிடம்: மொத்தமாகவும் சில்லறையாகவும்

அரிசி தரம் - 1 அரிசி தரம் -2 பெற்றுக்கொள்ளலாம்

எமது கிறைண்டிங் ஆலையில்

- மிளகாய்த் தூள்
- மாவு அரைத்தல்
- அரிசி தீட்டல்
- நெல் உடைத்தல்

அனைத்து தேவைகளும் செய்துகொள்ளலாம்

அனைத்து விபரங்களுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்

# இராசம் அரிசி ஆலை

**பிரதானவீதி - சாவகச்சேரி**

(சி-5242)

நல்லூர் [illegible]
யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

சொல்லுக்கு ஒப்பச் செயலையும்
செயலுக்கு ஒப்பச் சொல்லையும்
இணங்கச் செய்ய வேண்டும்.

— வில்லியம் ஷேக்ஸ்பியர்

ஈழநாதம்

31 மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 18-10 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## பேச்சும், செயலும்

"வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு மட்டுமே உகந்தது. இதனைப் பேச்சுவார்த்தை மூலம் விரைவில் காண வேண்டும்" இவ்வாறு, கொழும்பு வந்துள்ள பிரிட்டிஷ் துணை அமைச்சர் மார்க் பொயிட் சிறிலங்கா ஜனாதிபதியுடன் நடைபெற்ற சந்திப்பின்போது வற்புறுத்தியதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, பிரிட்டன் மீண்டும், சிறிலங்கா அரசிற்கு பொருளாதார உதவிகளை வழங்கவும், சிறிலங்கா அரசுடனான உறவுகளை வழமை நிலைக்குக் கொண்டுவந்து இரு நாடுகளுக்கும் இடையேயான இருதரப்பு உறவுகளை முன்னரைப் போல சீராக்கவும் பிரிட்டன் அரசு முடிவு செய்துள்ளதாகவும் பிரிட்டிஷ் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதாவது, சிறிலங்காவில், பிரிட்டிஷ் தூதுவராகப் பணிபுரிந்த டேவிட் கிளாஸ் ரோன் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையில் எழுந்த மனக்கசப்பால் உருவான விரிசல் நிலையைப் போக்க பிரிட்டன் முடிவு செய்துள்ளதோடு, சிறிலங்காவிற்கு வழங்கும் உதவிகளில் இருந்த கட்டுப்பாட்டை நீக்குவதற்கும் முடிவு செய்துள்ளது எனக் கொள்ளலாம்.

இந்நிலையில், பிரிட்டிஷ் இணை அமைச்சர் வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு சிங்கள அரசாங்கம் அரசியல் தீர்வுகாணப்பட வேண்டும் என வற்புறுத்தியமை எந்தளவிற்குப் பயனளிக்கக் கூடியது என்பதே முக்கியமான கேள்வியாகும். ஏனெனில், சிறிலங்கா, இன பிரச்சினை விவகாரத்தில் வேறு எவருடைய ஆலோசனையும் கேட்கத்தயாராக இல்லை பௌத்த பேரினவாதம் அதற்கு இடமளிக்க போவதுமில்லை போரைத் தொடர்ந்து நடத்தவே முடிவாகவுள்ளது.

சிறிலங்கா என்றுமில்லாதவாறு பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளது. இதனை, ஒருவீதமாக இருந்த பாதுகாப்பு வரியை மூன்று வீதமாக உயர்த்தியதில் இருந்து, அகதிகளுக்கு

---

ஜப்பானில் வேலை வாய்ப்பு எனக் கூறி

## பெரும் பண மோசடி செய்த பௌத்த பிக்கு கைது

(கொழும்பு)

ஜப்பானில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி பெருந்தொகையான இளைஞர்களை ஏமாற்றி அவர்களிடமிருந்து பெருந்தொகைப் பணத்தை சுருட்டிக் கொண்ட பௌத்தபிக்கு ஒருவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

காவத்தைப் பொலிசாரால் கைது செய்யப்பட்ட மேற்படி பிக்கு வளவைப் பொலிஸ் பகுதியில் வரும் நிக்கலு பொத்தவைச் சேர்ந்தவராவார். இவரிடம் கொழும்பு, காவத்தை, இரத்தினபுரி, சியம்பலாண்டுவ பகுதிகளைச் சேர்ந்த பலர் இவரது ஆசை வார்த்தைகளை நம்பி பணத்தை இழந்திருப்பதாக சொல்லப்படுகிறது.

ஒவ்வொரு இளைஞரிடமிருந்தும் 50,000 ரூபா முதல் ஒரு லட்சம் ரூபாவரையில் இப் பிக்கு பெற்றுக்கொண்டதாகவும், இவர் தன்னினச் சேர்க்கையிலீடுபாடு கொண்டு அதற்காக பெருந்தொகைப் பணத்தை செலவிட்டதாகவும் புலன் விசாரணைகள் மூலம் தெரிய வருவதாக பொலிசார் கூறியுள்ளனர்.

---

### இலவச வகுப்புகள்

தென்மராட்சி கிழக்குப் பகுதியில் மாணவ மாணவிகளுக்கான மாலை நேர இலவச வகுப்புகளைத் தென்மராட்சி மாணவர் அமைப்பு ஒழுங்கு செய்து நடாத்தி வருகின்றது. கச்சாய், கெற்பெலி (பண்டிதர் குடியிருப்பு) கிளாலி (தினேஸ் கல்வி வளர்ச்சிக் கழகம்) போன்ற இடங்களில் இவ்வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. இவ்வகுப்புகளில் சுமார் 250 மாணவர்கள் வரை கல்வி கற்று வருகின்றனர். இதற்குத் தென்மராட்சிப் பகுதி ஆசிரியர்களின் ஒத்துழைப்பும் காரணமாக இருந்து வருகின்றது. (86)

---

## புலிகள் அழியக்கூடாது; பிரேமதாசா அக்கறையாம்

சோ குற்றச்சாட்டு

பிரேமதாசாவும் அடிப்படையில் ஓர் இந்திய எதிர்ப்புவாதியே. அதனால் விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டு விடக்கூடாது என்பதில் அவர் கவனம் கொண்டுள்ளார் என்று துக்ளக் பத்திரிகையில் ஆசிரியர் சோ. இராமசாமி கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில்; சிறிலங்காவைப்பொறுத்தவரை விடுதலைப்புலிகள் இந்திய எதிர்ப்பில் முன்னணியில் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

---

### கூட்டணி அதிருப்தியாம்

பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் சார்பாக மங்கள முனசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றிய யோசனைகளுக்குத் தமிழர் விடுதலைக் கூட்டணி அதிருப்தி தெரிவித்திருப்பதாகத் தெரிய வருகின்றது.

---

## தோட்ட தமிழ் பாடசாலைகளில் சிங்கள ஆசிரியர்கள் நியமனம்

(மத்துகம)

தமிழ் பாடசாலைகளில் தமிழ் ஆசிரியர்கள் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கும் நிலையில் களுத்துறை மாவட்டத்திலுள்ள பெருந் தோட்டங்களில் அமைந்துள்ள தமிழ் பாடசாலைகளில் சிங்கள மொழியில் சித்தியடைந்த ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது

மத்துகம, அகலவத்தை, புலத்சிங்கள போன்ற வட்டாரங்களிலுள்ள தமிழ் பாடசாலைகளிலேயே இவ்வாறாக சிங்கள ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றார்கள்.

அநேக தோட்டப் பாடசாலைகளில் ஆரம்பக்கல்வியைப் புகட்டுவதற்கே தமிழ் ஆசிரியர்கள் இல்லாதிருக்கும் போது இவர்களால் எப்படி தமிழ்ப்பிள்ளைகளுக்கு பாடம் கற்பிக்கமுடியும் என்றும்,

இன்னும் மத்துகம வட்டாரத்தில் உள்ள ஒருசில பெருந் தோட்டங்களில் சிங்கள இனத்தவர்களே அதிபர்களாக கடமையாற்றி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இந்நிலைமை தொடர்ந்து நீடிக்குமேயானால் இம் மாவட்ட பெருந்தோட்டங்களில் அமைந்துள்ள தமிழ்ப்பிள்ளைகளின் எதிர்காலம் என்னவாகுமோ என பெற்றோர் பலர் கவலை தெரிவித்துள்ளனர்.

---

### நன்றி தெரிவிப்பு

(குருநகர்)

யாழ் மாநகர சபையினால் குருநகர் சனசமூக நிலையச் சுற்றாடலில் குழாய்க் கிணறு அமைத்து மக்களின் குடிநீர் பிரச்சினையைத் தீர்த்து வைத்தமைக்காக யாழ் மாநகர சபை ஆணையாளருக்கும், நீர் வேலைப் பகுதியினருக்கும் தொடர்மாடி மக்கள் நன்றியைச் செலுத்தியுள்ளனர். (21)

---

### சிங்கள மொழியில் சுற்று நிருபங்கள்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை அரச காரியாலயங்களுக்கு சிங்கள மொழியிலேயே சுற்றுநிருபங்கள் அனுப்பிவைக்கப்படுவதாக காரியாலய ஊழியர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

சமீபத்தில் துறைமுக அதிகாரசபை அலுவலகத்திற்கு சிங்களத்தில் சுற்றுநிருபம் அனுப்பிவைக்கப்பட்டதை அடுத்து, இந்நடவடிக்கைக்கு காரணம் கேட்கப்பட்டபோது தமிழில் மொழிபெயர்க்க ஆளில்லை என்று தெரிவிக்கப்பட்டதாம். (தி)

---

## இடம் பெயர்ந்த மக்களுக்கு கைதடியில் கொட்டகைகள்

(யாழ்ப்பாணம்)

மாதகல், அளவெட்டி, இளவாலை ஆகிய இடங்களில் இருந்து இராணுவ நடவடிக்கையினால் இடம் பெயர்ந்து அகதிகளாகத் தங்கியுள்ள மக்களுக்கு இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கம் கைதடியில் சுமார் ஐந்நூறு கொட்டகைகளை அமைத்து அவர்களை அதில் குடியமர்த்தும் வேலைகள் மிகத் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவருகிறது.

மேலும் இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கத்தினால் யாழ். குடாநாட்டின் வேறு சில பகுதியில் அமைக்கப்பட்டு ஓரளவு பழுதடைந்தநிலையில் உள்ள சுமார் 1200 கொட்டகைகளை திருத்தியமைக்கும் வேலைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன இவை திருத்தி அமைக்கப்பட்டதும் அங்கு அகதிகள் குடியமர்த்தப்படுவர் என தெரியவருகின்றது. (பா) (க)

---

## வடமராட்சியில் பனம் விதைகள் நாட்டப்பட்டன

வடமராட்சி கரவெட்டி வட்டவை பகுதியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் காடு வளர்ப்புத் திட்டத்தின் மூலம் 1450 பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டன.

இவை 10'x10'க்குஒருவிதையாக இரண்டு நிரைகளில் நடப்பட்டது. இந்நிகழ்வானது கடந்த 14ஆம் திகதி அன்று காலை 8 மணியளவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது இந்நிகழ்வில் கிராமிய உற்பத்திக்குழு உறுப்பினர்களும் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

இவ் விதைகள் அனைத்தும் வல்லை வெளியில் உள்ள முனியப்பர் ஆலய சுற்றாடலில் இருந்து பருத்தித்துறை-யாழ் வீதியில் அமைந்துள்ள வல்வை சந்தி வரைக்குமான நிலப்பரப்பிலேயே நாட்டப்பட்டன.

---

## ஜம்மு காஷ்மீர் பிரச்சினை குறித்து இந்திய, பாக். எதிர்க்கட்சிகள் இழுபறி

(இஸ்லாமாபாத்)

சமாதானத்திற்கு பங்கம் விளைவிப்பதனையோ, இந்தியாவும் பாகிஸ்தானும் போர் புரிவதனையோ நாம் விரும்பவில்லை காஷ்மீரிகள் சுயநிர்ணய உரிமை பெற வேண்டும் என்பதையே நாம் விரும்புகிறோம் என பாகிஸ்தான் எதிர்க்கட்சிகள் கூட்டணி அறிவித்துள்ளது

மென அவர் மேலும் தெரிவித்தார்.

ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி இது போன்ற ஓர் ஏற்பாட்டை கடந்த பெப்ரவரி மாதம் நடைமுறைப்படுத்திய போது பாகிஸ்தான் அரசு துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு தடுத்து நிறுத்தியதும் 7 பேர் உயிரிழந்ததும் தெரிந்ததே.

வலதுசாரி பாரதீய ஜனதாக் கட்சி பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீர் பகுதியை இந்தியா கைப்பற்ற வேண்டும் என வற்புறுத்தியுள்ளது காஷ்மீரில் எதிர்ப்பு இயக்கங்களை மேற்கொள்ளப் போவதாக பாரதீய ஜனதாக் கட்சி அறிவித்ததுடன் பாகிஸ்தான் எதிர்க்கட்சிகள் நடவடிக்கையின் போது எதிர் நடவடிக்கை

---

## "இந்திரா காந்தி ஒருவாழ்க்கைச் சரித்திரம்"

1984இல் தன்னுடைய மெய்ப்பாதுகாவலர்களாலேயேசுட்டுக் கொல்லப்படுவதற்குஇரண்டு வருடங்களின் முன்னரே, தன்னுடைய படுகொலை தொடர்பாக மயிர்க்கூச்செறியும் பயங்கரக் கனவுகளால் இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி பாதிக்கப்பட்டிருந்தார் என அவருடைய வாழ்க்கை தொடர்பாக புதிதாக எழுதப்பட்டுள்ள நூலொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதத்தில் வெளியிடப்படவுள்ள "இந்திரா காந்தி ஒரு வாழ்க்கைச் சரித்திரம்" என்ற இந்தநூலின் சில விபரங்கள் கடந்த வாரம் வெளியிடப்பட்டது இந்த நூலை பாபுல் ஜெயகார் எழுதியுள்ளார்

"கொடுமையான வயோதிபப் பெண் ஒருவர் ஒவ்வொரு இரவும் மிகுந்த வெறுப்புடன் என்னை அழிப்பதற்காக நெருங்கி வருவது போல கனவு கண்டேன் நான்

நாடுகளுக்கும் இடையில் எழுந்த மனக்கசப்பால் உருவான விரிசல் நிலையைப் போக்க பிரிட்டன் முடிவு செய்துள்ளதோடு,சிறிலங்காவிற்கு வழங்கும் உதவிகளில் இருந்த கட்டுப்பாட்டை நீக்குவதற்கும் முடிவு செய்துள்ளது எனக் கொள்ளலாம்.

இந்நிலையில், பிரிட்டிஷ் இணை அமைச்சர் வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு சிங்கள அரசாங்கம் அரசியல் தீர்வுகாணப்பட வேண்டும் என வற்புறுத்தியமை எந்தளவிற்குப் பயனளிக்கக் கூடியது என்பதே முக்கியமான கேள்வியாகும். ஏனெனில், சிறிலங்கா, இனப் பிரச்சினை விவகாரத்தில் வேறு எவருடைய ஆலோசனையும் கேட்கத்தயாராக இல்லை பௌத்த பேரினவாதம் அதற்கு இடமளிக்க போவதுமில்லை போரைத் தொடர்ந்து நடத்தவே முடிவாகவுள்ளது.

சிறிலங்கா என்றுமில்லாதவாறு பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளது. இதனை, ஒருவீதமாக இருந்த பாதுகாப்பு வரியை மூன்று வீதமாக உயர்த்தியதில் இருந்து, அகதிகளுக்கு வழங்கப்படும் நிவாரணங்களை வெட்டமுற்பட்டதில் இருந்துமே புரிந்து கொள்ளலாம், இந்நிலையில் யார் மேற்கொள்ளும் சிறு உதவியும் சிறிலங்காவிற்கு பேருதவியாகவும், சந்தர்ப்பம் அறிந்து உதவியது போன்றுமே இருக்கும்.

இவ்வாறு பொருளாதார நெருக்கடி உருவாவதற்கு, இராணுவத்திற்கென பெருந் தொகைப் பணத்தை அரசு செலவு செய்வதே காரணமாகும். சிறிலங்காவின் இவ்வருட இராணுவச் செலவு 2000 கோடி ரூபாவில் இருந்து 2.500 கோடி ரூபா வரையில் செல்லும் எனத் தெரிய வருகின்றது. அதாவது மொத்த தேசிய வருமானத்தில் சுமார் ஏழு வீதமாகும்.

இந்நிலையிலும், சிறிலங்காவிற்கான பொருளாதார உதவிகளை வழங்க பிரிட்டன் முன்வந்துள்ளமை பிரிட்டன் போன்ற நாடுகள் அரசியல் தீர்வில் எந்தளவு அக்கறை கொண்டுள்ளன என்பன குறித்து ஐயப்பாடுகளை எழவைக்கின்றன. அதாவது இந்நாடுகளின் நடத்தை அவை உண்மையில் அரசியல் தீர்வை விரும்புகின்றனவா என்பதைக் கேள்விக்குரியதாகின்றன.

இதை உணர்த்துமாப் போலவே சர்வதேச நிதிநிறுவனங்களின் நிலைப்பாடும் உள்ளன. சிறிலங்காவில், மனித உரிமைகள் மீறப்படுவதாகவும் உள்நாட்டுப் போரினால் பெரும் அழிவுகள் ஏற்படுகின்றதெனவும், இவை தொடர்ந்தால் சிறிலங்காவிற்கு வழங்கப்படும் உதவிகள் நிறுத்தப்படும் என உலக நிதிநிறுவனங்கள் எச்சரித்து வந்தாலும் பின்னர் எதுவித தடைகளுமின்றி பெருந் தொகைக் கடனை வழங்கிவருகின்றன. கடந்த சில நாள்களுக்கு முன்னரும் கூட 16 கோடியே 40 இலட்சம் டொலர்களை சர்வதேச நாணயநிதியம் சிறிலங்காவிற்கு வழங்கியது.

இவற்றை கூர்ந்து பார்க்கும்போது உதவி வழங்கும் நாடுகளும், அவற்றின் செல்வாக்கிற்குள் உட்பட்டு இருக்கும் சர்வதேச நிதிநிறுவனங்களும் சொல்வது ஒன்றாகவும், நடைமுறை வேறொன்றாகவும் இருப்பதையே காணலாம், இந்நிலையில், இந்நாடுகளினதும், அமைப்புக்களினதும் நிபந்தனைகளும், கட்டுப்பாடுகளும் போலியானவை என்றும், அவை யுத்தங்களை நிறுத்துவதிலும், மனித உரிமைகள் பேணுவதிலும் காட்டும் அக்கறை எந்தளவிற்கு நம்பிக்கைத்தன்மை கொண்டவை என்பதும் கேள்விக்குறியவையே.

---

த்தவரை விடுதலைப்புலிகள் இந்திய எதிர்ப்பில் முன்னணி

டணி அதிருப்தி தெரிவித்திருப்பதாகத் தெரிய வருகின்றது.

தமிழில் மொழிபெயர்க்க ஆளில்லை என்று தெரிவிக்கப்பட்டதாம். (தி)

நடைபெற்றது. இந்நிகழ்வானது கடந்த 14ஆம் திகதி அன்று காலை 8 மணியளவில்ஆரம்பி

யாழ் வீதியில் அமைந்துள்ள வல்வை சந்தி வரைக்குமான நிலப்பரப்பிலேயே நாட்டப்பட்டன.

---

# ஜம்மு காஷ்மீர் பிரச்சினை குறித்து இந்திய, பாக். எதிர்க்கட்சிகள் இழுபறி

(இஸ்லாமாபாத்)

சமாதானத்திற்கு பங்கம் விளைவிப்பதனையோ, இந்தியாவும் பாகிஸ்தானும் போர் புரிவதனையோ நாம் விரும்பவில்லை காஷ்மீரிகள் சுயநிர்ணய உரிமை பெற வேண்டும் என்பதையே நாம் விரும்புகிறோம் என பாகிஸ்தான் எதிர்க்கட்சிகள் கூட்டணி அறிவித்துள்ளது

பிரச்சினைக்குள்ளாகியுள்ள பாகிஸ்தான் இந்திய காஷ்மீர் யுத்த நிறுத்த வரையறைக் கோட்டைத் தாண்டி சமாதான நடைபோடப் போவதாக ஜம்மு காஷ்மீர் கூட்டணித் தலைவர் சுல்தான் மஹ்மூத் சௌத்ரி கடந்த புதன் கிழமை நிருபர்களிடம் பேசும் போது தெரிவித்தார்.

ஐ. நா.தினமான எதிர்வரும் 24 ஆம் திகதி பாகிஸ்தான் காஷ்மீர்பகுதியில் இருந்து இப்பாத நடை ஆரம்பமாகி இந்திய காஷ்மீரில் மூன்னேறுமென அவர் மேலும் தெரிவித்தார்.

ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி இது போன்ற ஓர் ஏற்பாட்டை கடந்த பெப்ரவரி மாதம் நடைமுறைப்படுத்திய போது பாகிஸ்தான் அரசு துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு தடுத்து நிறுத்தியதும் 7 பேர் உயிரிழந்ததும் தெரிந்ததே.

இதேவேளை பாகிஸ்தான் எதிர்க்கட்சிகள் அஸாத்காஷ்மீரிலிருந்து இந்தியா செல்ல முற்பட்டால் அதனைத் தடுத்து நிறுத்தப் போவதில்லை என முதலமைச்சர் சர்தார் அப்துல் கையூம் தெரிவித்தார். அத்துடன் இந்தியாவுடன் மோதல் ஏற்படுவதனை பாகிஸ்தான் விரும்பவில்லை எனவும் அரசியல் ஆய்வாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் இந்திய எதிர்க்கட்சிகளிலொன்றான வலதுசாரி பாரதிய ஜனதாக் கட்சி பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீர் பகுதியை இந்தியா கைப்பற்ற வேண்டும் என வற்புறுத்தியுள்ளது காஷ்மீரில் எதிர்ப்பு இயக்கங்களை மேற்கொள்ளப் போவதாக பாரதிய ஜனதாக் கட்சி அறிவித்ததுடன் பாகிஸ்தான் எதிர்க்கட்சிகள் நடவடிக்கையின் போது எதிர் நடவடிக்கையிலும் ஈடுபடும் என அறிவித்துள்ளது.

மேலும் இந்திய காஷ்மீரின் நிலைமை மோசமடையலாம் என ஜனதா கட்சி உப தலைவர் கே. எஸ் சர்மா நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

1947 ஆம் ஆண்டிற்குப் பிறகு பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையே நடைபெற்றுள்ள மூன்று யுத்தங்களில் இரண்டு காஷ்மீர் சம்பந்தப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

# எல்லை தாண்டும் இந்திய மீனவர்மீது சிறிலங்கா கடற்படை தாக்காது

-ஆர். கே. பாட்டியா தகவல்

(டில்லி)

இந்தியாவின் கடலெல்லையைத் தாண்டி இலங்கைக் கடற்பரப்பினுள் தவறுதலாக சென்றுவிடும் இந்திய மீனவர்களைத் தாக்கக்கூடாது என்று சிறிலங்கா அரசு கடற்படையினருக்கு உத்தரவிட்டிருப்பதாக இந்திய வெளியுறவு இணைச்செயலர் ஆர் கே பாட்டியா கூறியுள்ளார்.

கடந்த ஆகஸ்டில் இராமேஸ்வரத்திலிருந்து புறப்பட்ட மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டதுபற்றிய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் கடிதத்திற்கு பதிலளித்த அவர், அம்மீனவர்களும் படகுகளும் தற்போது விடுவிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கையின் வடபகுதியில் நிலவும் பாதுகாப்பு நிலைமையைக் கருத்திற் கொண்டு கச்சதீவுப் பகுதியில் மீன் பிடிக்கும் இந்திய மீனவர்களின் உரிமை தற்காலிகமாக ரத்துச் செய்யப்பட்டிருப்பதாகவும், இயல்பு நிலை திரும்பிய பின்னர் அந்த உரிமை மீளப் பெறப்படும் என்ற உத்தரவாதம் இலங்கை அரசிடமிருந்து பெறப்பட்டிருப்பதாகவும் கூறியுள்ளார்.

### மனித உடலுக்கு பன்றி ஈரல் பொருத்தல்

# பரிசோதனைக்குள்ளாகிய பெண்மணியொருவர் பலி

(லொஸ்ஏஞ்ஜல்ஸ்)

பன்றி ஈரலை மனிதனுக்கு பொருந்தலாம் என எட்டு வருடங்களாக ஆராய்ச்சியிலீடுபட்ட அறுவைச்சிகிச்சை டாக்டர் ஒருவருக்கு திடீர் சந்தர்ப்பம் கிடைத்தது.

முப்பது வயது பெண் ஒருத்தியின் ஈரல் கெட்டிருந்ததனை அடுத்து அவருக்கு பன்றி ஈரல் பொருத்த ஏற்பாடாகியது.

ஆறு அறுவைச்சிகிச்சை டாக்டர்களும் 30 நர்ஸ்களும் ஈடுபட்ட சத்திரசிகிச்சை எட்டு மணித்தியாலம் வரை நீடித்தது. பாதிக்கப்பட்டுள்ள ஈரல் நீக்காமலே பன்றியின் ஈரல் பொருத்தப்பட்டது. மனித ஈரல் கிடைக்கும் வரை இது ஓர் தற்காலிக ஏற்பாடென குறிப்பிட்ட அறுவைச் சிகிச்சை நிபுணர் தெரிவித்தார்.

மனித ஈரலொன்றைப் பொருத்துவதற்கான 12 மணித்தியால சத்திரசிகிச்சை நடாத்த டாக்டர்கள் தயாராகும் போது பன்றி ஈரல் பொருத்தப்பட்ட 30 வயது நிரம்பிய சுசேன் பவல்ரெனும் பெண்மணி இறந்து விட்டாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

பன்றிக்கும் ஒரு நபருக்கும் பெருத்த இடைவெளியுண்டென இச் சத்திர சிகிச்சைக்கு டாக்டர்கள் சிலர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

அவசரமாகத் தேவைப்பட்ட மனித ஈரல் கிடைக்காததால் பன்றியின் ஈரல் முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக ஆஸ்பத்திரி அதிகாரிகள் தெரிவித்தனர்.

# “இந்திரா காந்தி ஒருவாழ்க்கைச் சரித்திரம்”

1984இல் தன்னுடைய மெய்ப்பாதுகாவலர்களாலேயேசுட்டுக் கொல்லப்படுவதற்குஇரண்டு வருடங்களின் முன்னரே, தன்னுடைய படுகொலை தொடர்பாக மயிர்க்கூச்செறியும் பயங்கரக் கனவுகளால் இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி பாதிக்கப்பட்டிருந்தார் என அவருடைய வாழ்க்கை தொடர்பாக புதிதாக எழுதப்பட்டுள்ள நூலொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதத்தில் வெளியிடப்படவுள்ள ''இந்திரா காந்தி ஒரு வாழ்க்கைச் சரித்திரம்'' என்ற இந்தநூலின் சில விபரங்கள் கடந்த வாரம் வெளியிடப்பட்டது இந்த நூலை பாபுல் ஜெயகார் எழுதியுள்ளார்

''கொடுமையான வயோதிபப் பெண் ஒருவர் ஒவ்வொரு இரவும் மிகுந்த வெறுப்புடன் என்னை அழிப்பதற்காக நெருங்கி வருவது போல கனவு கண்டேன் நான் கீழே விழுந்துவிட்டேன் ஒன்றும் செய்யமுடியாதவாறு ஸ்தம்பித நிலையை அடைந்தேன்'' என இந்திராகாந்தி தன்னுடைய அச்சந்தரும் கனவை விபரிக்கின்றார் என்று பாபுல் ஜெயகார் தெரிவித்திருக்கின்றார்.

இந்திரா காந்தியின் இறுதிக் காலத்தில் சீக்கிய தீவிரவாதிகளை ஒடுக்குவதற்காக பொற்கோவில் மீதான தாக்குதலை மேற்கொண்டிருந்தார். இந்திராகாந்தியின் இந்த உத்தரவால் பல சீக்கிய தீவிரவாதிகள் பொற்கோவிலுக்குள் கொல்லப்பட்டனர். இதற்குப் பிறகே அவர் இவ்வாறான கனவுகளை கண்டதாக இந்திராகாந்தியின் நெருங்கிய நண்பரும் நூல் ஆசிரியருமான ஜெயகார் குறிப்பிட்டுள்ளார்.

''அந்தப் பெண் அங்கு நிற்கும் போது நான் எனது கண்களை இறுக மூடிக்கொள்கிறேன். என்னையும் என்னுடைய தெளிவான அரசியல் நடவடிக்கைகளையும் அழிப்பதற்காக மேற்கொள்ளப்படும் சடங்குகள் பற்றியும், சூனிய வேலைகள் தொடர்பாகவும் எனக்கு ரகசியத் தகவல்கள் கிடைத்துக் கொண்டே இருந்தன'' என்றும் இந்திராகாந்தி தெரிவித்துள்ளாராம்.

1975 ஆம் ஆண்டில் பங்களாதேஷ் ஜனாதிபதி முஜிபுர் ரஹ்மான் படுகொலை செய்யப்பட்டமையே இந்திராகாந்தியின் அச்சத்தை அதிகரித்தது எனவும் ஜெயகார் தெரிவித்தார்.

பங்களாதேஷைப் பிளவுபடுத்தக் காரணமாக இருந்த இந்தியா - பாகிஸ்தான் யுத்தம் நடைபெற்ற நான்கு வருடங்களின் பின்னர் முஜிபுர்ரஹ்மான் கொல்லப்பட்டார் பங்களாதேஷ் உருவாக்கப்பட பிரதான காரணமாக இருந்த இந்திராகாந்தி முஜிபுர் ரஹ்மானுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தார்.

முஜிபுர் ரஹ்மானின் படுகொலை தன்னுடைய எதிர்ப்பாளர்கள் மீதான பிடியை இறுக்குவதற்கான ஒரு தூண்டுதலை இந்திராகாந்திக்கு கொடுத்த நிகழ்ச்சியாக இருந்தது என்று ஜெயகார் கூறுகின்றார்.

### ராமர் ஜென்மபூமி பாபர்மசூதி பிரச்சினை

# சுமுகமான இணக்கம் காண இருதரப்பும் இணக்கம்

விஷ்வ இந்து பரிஷித்தும், பாபர் மசூதி செயல் கமிட்டியும் நேற்று முன்தினம் புதுடில்லியில் சந்தித்துப் பேசியுள்ளன.

ராமர் ஜென்மபூமி- பாபர் மசூதி பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு ஒன்றைக் கண்டறிய இருதரப்பும் இணக்கம் தெரிவித்துள்ள அதேவேளை அரசினால் குறிக்கப்படும் ஒரு திகதியில் மீண்டும் சந்திக்கவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

அதனிடையில் சர்ச்சைக்கு உட்பட்ட பகுதியில் தத்தம் உரிமையை நிலைநாட்ட தேவையான ஆவணங்கள் மற்றும் சான்றுகள் இம் மாதம் 23 ஆம் திகதிக்கு முன் அரசிடம் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவற்றின் நகல்கள் பரஸ்பரம் பரிமாறிக் கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புகழ்பெற்ற தொல்லியல் கண்டுபிடிப்பாளரான பி.பி. லாலின் கண்டு பிடிப்புக்கள் இருபத்துநான்காம்திகதியன்று நிபுணர்களின் பரிசீலனைக்கு உட்படுத்தப்படவுள்ளன.

நல்லூர் [illegible] நூலகம்
[illegible]
யாழ்ப்பாணம்

ஈழநாதம்

# சீலமற்றோரின் கூப்பாடுகளை மக்கள் பொருட்படுத்த கூடாது

## ஜெயலலிதா வேண்டுகோள்

(சென்னை)

பேராசை பிடித்தோரும், சீலங்கள் அற்றோரும் கூப்பாடும், கோஷங்களும்இட்டாலும்அவற்றை நீங்கள்பொருட்படுத்தாதீர்கள் என்று முதல் அமைச்சரும், அ இ. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவியுமான செல்வி ஜெயலலிதா கட்சித் தொண்டர்களைக் கேட்டுக்கொண்டார்.

அவர்கள் மக்களில் நம்பிக்கை வைக்காது, அதிகாரத்திலும், மனுக்கள் சமர்ப்பிப்பதிலுமே நம்பிக்கை உள்ளவர்கள் என்றும் கூறினார்

அ. இ அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் நிறுவப்பட்டு 21-வது ஆண்டுவிழாவில் கழகத்தலைமைக்காரியாலயம் முன்னால் கழகக் கொடியை ஏற்றிவைத்து, கட்சிஸ்தாபகர் எம் ஜி ஆரின் வெண்கலச் சிலையை திரைநீக்கம்செய்து வைத்துபேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமியையும், தி.மு.க தலைவர் கருணாநிதியையும் 'பெட்டிஷன் கோமாளிகள்' என்று ஜெயலலிதா வர்ணித்தார்.

டாக்டர் சுவாமியும், மு. கருணாநிதியும் ஜெயலலிதா மீது ஊழல் குற்றஞ்சாட்டியும் பதவி நீக்கக்கோரியும் தமிழ் நாடு ஆளுநரிடம் மனுக்கள் சமர்ப்பித்திருப்பது தெரிந்ததே.

## சிப்பாய் தற்கொலை

மட்டக்களப்பு வந்தாறுமூலை இராணுவமுகாமைச் சேர்ந்த எச். எம். ஜயதிலக என்ற இராணுவவீரர் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்கொலைக்கான காரணம் பற்றி பொலிஸார் தீவிர விசாரணை செய்து வருகின்றனர்.

## அகதிகளுக்கு
## உடு புடைவை வழங்கினர்

மானிப்பாய், அதிகாரி செல்லமுத்து வீதி முகாம், கல்லூரி முகாம் 2 ஆகியவற்றில் தங்கியுள்ள அகதிகளுக்கு யாழ் நகர மத்தி றோட்டறிக் கழகத்தினர் உடுபுடைவைகளை வழங்கினர்.

இவர்கள் இங்குள்ள சுமார் 100 குடும்பங்களுக்கு நல்லூர் யாழ் நகரப் பகுதியில் சேகரித்த போர்வைகள் தலையணைகள் சிறுவர் சிறுமியர்களுக்கான உடுபுடைவைகளையும் வழங்கியுள்ளனர். (42)

## ஞாபகார்த்த சபை
## அமர்தல்

இன்று முற்பகல் 10மணிக்கு யாழ் புனித பத்திரிசியார் தொழில் நுட்ப நிறுவன மண்டபத்தில் அமரர் வைத்திய கலாநிதி ஜே. பி சி. பிலிப்ஸ் ஞாபகார்த்த சபை அமர்தல் நடைபெற இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

பிலிப்ஸ்நினைவாக புலமைப் பரிசில்களை யாழ் பல்கலைக் கழகம் மற்றும்துறை சார்ந்த நிறுவனங்களூடாக மாணவர்களுக்குசமயம், கலை, தொழில் கல்வி, உடற்பயிற்சி போன்ற துறைகளில் வழங்கும் நோக்குடன் அறங்காவல் சபை ஒன்றை நிறுவிச் செயற்பட மேற்படி அமர்வு நடைபெறுகிறதென தெரிவிக்கப்படுகிறது. (21)

## நிவாரணம் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க பாவனையாளர்களுக்குரிய ஐப்பசி மாதத்திற்கான நிவாரண உலர் உணவுப் பொருள்கள் இன்று தொடக்கம் சங்க நிவாரண கிளைகளில் விநியோகிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (22)

வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

கல்வியாண்டு 93 / 94

## மன்னார் புதிய ஆயர் திருநிலைப்படுத்தல்

(நல்லூர்)

மன்னார் மறை மாவட்டத்தின் புதிய ஆயராக அருட்திரு இராயப்பு ஞானானந்தர் யோசவ் அடிகளார் செவ்வாய் பிற்பகல் 5.00 மணிக்கு மடுத் திருப்பதியில் மன்னார் மறை மாவட்டத்தின் புதிய ஆயராக திருநிலைப்படுத்தப்பட உள்ளார்.

புதிய ஆயரை திருநிலைப் படுத்தும் திருச்சடங்குகளுக்கு யாழ் ஆயராக புதிதாக நியமனம் பெற்றுள்ள பேரருள் திரு. தோமஸ்சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையேற்று நடாத்த உள்ளார். இவ் வைபவத்தில் இலங்கையின் திருப்பீடத் தூதுவர் பேரருட் திரு. பிரான்சுவா பக்கே ஆண்டகை கொழும்பு மறைமாவட்ட பேராயரும் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவருமாகிய பேரருட்திரு. நிக்கலஸ்மாக்கஸ் பெர்ணான்டோ ஆண்டகை அவர்களும் இலங்கையின் ஏனைய கத்தோலிக்க மறைமாவட்டங்களின் ஆயர்களும் கலந்து கொள்ள உள்ளார்கள் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# மேலதிக வேலைகளை வங்கி ஊழியர் பகிஷ்கரிப்பர்

(கொழும்பு)

வழமையான வங்கிக் கடமைகளைத் தவிர்ந்த வங்கியுடன் தொடர்புடைய ஏனைய வேலைகளைப் பகிஷ்கரிப்பதென இலங்கை வங்கி ஊழியர் சங்க கமேர்ஷல் வங்கிக் கிளை தீர்மானம் எடுத்துள்ளது கரும பீடங்களில் பணத்தைக் கொடுத்து வாங்கும் போது கையிருப்பில் பணம் குறைந்தால் குறையும் தொகையை சம்பந்தப்பட்ட ஊழியர் உடன் செலுத்த வேண்டும் என்று வங்கி நிர்வாகம் பணித்ததைத் தொடர்ந்து இந்தப் பகிஷ்கரிப்பு நடவடிக்கை.

கமேர்ஷல் வங்கிக் காசாளர் குறையும் தொகையை முன்பு தவணை முறையிலேயே செலுத்தி வந்தனர். வங்கி நிர்வாகத்தின் இந்தப் புதிய உத்தரவு வழமையான நடைமுறைகளுக்கு மாறானது என்றும், வங்கி நிர்வாகத்தின் இந்த உத்தரவுக்குப் பணிவதானால் வங்கிக் காசாளர்கள் தமது சொத்தை விற்று அல்லது ஈடு வைத்துத்தான் பணத்தைச் செலுத்த வேண்டும் என்று கமேர்ஷல் வங்கிக் கிளை ஊழியர் சங்கத்தின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

கிளைச் சங்கம் பல முறை தமது நிலையை வங்கி நிர்வாகத்துக்கு எடுத்துச் சொல்லியும் வங்கி நிர்வாகம் செவிசாய்க்காத காரணத்தினாலேயே தாம் இந்த முடிவை மேற்கொண்டிருப்பதாக ஊழியர் சங்கம் மேலும் தெரிவிக்கின்றது.

கொழும்பில் கமேர்ஷல் வங்கி ஊழியர்கள் மற்ற நிறுவனங்களுடனான உதைபந்தாட்டம், வலைப் பந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றாது பகிஷ்கரித்து வருகின்றனர்.

---

### செயலாளரின்

வியை இரத்துச் செய்யுமாறும் யாழ். கல்விப்பணிப்பாளர் தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் திருமதி திருலோகசுந்தரி காரியவாசம் அவர்களுக்கு அவசர வேண்டுகோள் ஒன்றையும் விடுத்துள்ளார்.

மேற்படி தகவல்களை ஊர்ஜிதம் செய்த சங்கத்தின் பொதுச் செயலாளர் இடமாற்றங்கள் சங்க நடவடிக்கைகளில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தப் போவதில்லையெனவும், சங்கமும் தானும், எதையும் எதிர்கொள்ளத் தயாராகவிருப்பதாகவும் தெரிவித்தார்

## கிளிநொச்சி விவசாயிகளுக்கு திருந்திய நெல்லின விதைகள்

(கிளிநொச்சி)

திருந்திய நெல் இனங்கள், சிறுதானிய பயிர் விதைகள், மரக்கறி விதைகள் என்பவற்றை பெற்று விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

கிளிநொச்சியில் தற்போது

கொட, கன்னொறுவ போன்ற விதைப் பண்ணைகளிலிருந்து தருவிக்கப்பட்டு கரைச்சி கமநலசேவை நிலையத்தில் வைத்து விற்பனை செய்யப்படுகின்றன.

இதனைப் பெற விரும்பும் விவசாயிகள் உடனடியாக

# தேசிய நலன் காக்கும் விதத்தில் வெளியுறவு கொள்கை தேவை

## - ரிரோன் பெர்னாண்டோ

''இலங்கையின் தேசியநலன்களைப் பாதுகாப்பதிலும் இலங்கைக்கு எது நன்மை பயக்கக் கூடியது என்பதன் அடிப்படையிலுமே இலங்கையின் வெளியுறவுக் கொள்கை அமைந்திருக்க வேண்டும்'' என்று சிறைச்சாலைகள் சட்டச் சீர்திருத்த அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

''கெடுபிடி யுத்த யுகத்தின் பின்னர் வெளியுறவுக் கொள்கை'' என்ற தலைப்பில் அமைச்சர் உரையாற்றினார்.

அமைதியை விரும்பும் சகல நாடுகளுடனும் நட்புறவைப் பேணுதல், சர்வதேச திட்டங்களைக் கடைப்பிடித்தல், தேசிய இறைமையையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் மீறாதிருத்தல். அபிவிருத்திக்கான உதவிகளை நாட்டின் கௌரவத்திற்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாத விதத்தில் ஏற்றுக் கொள்ளல், ஆகியவையே சர்ச்சைகள் எதுவுமில்லாத அடிப்படையில் நவீனகால வெளியுறவுக் கொள்கையை உருவாக்குவதற்கான ஒருங்கிணைந்த அணுகுமுறையாகும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் அதன் வெளியுறவுக் கொள்கை உருவாக்கத்தில் ஒரு தேசிய இணக்கம் ஏற்படுவதற்கான நேரம் இப்போது வந்துள்ளது என்றுதான் சொல்ல வேண்டும்.

சர்வதேச உறவுகளை ஜனநாயக மயப்படுத்துவதிலும் சர்வதேச தீர்மானங்களை மேற்கொள்வதிலும் அணிசாரா கோட்பாடு ஒரு சில கொள்கைகளை முன் வைத்திருக்கிறது.

அணிசாராமை என்பது மற்றைய நாடுகளின் உள்நாட்டு விடயத்தில் தலையிடாமையும் பிரச்சினைகளை அமைதியான முறையில் தீர்த்து வைப்பதையும் குறிப்பிடுகின்றது.

இரட்டைத் தன்மை (அமெரிக்க - சோவியத்) நிலையத்திலிருந்து உலகம் மாற்றம் அடைந்து வரும் ஒரு கால கட்டத்தில் இலங்கை இன்று உள்ளது என்று தமதுரையில் குறிப்பிட்டார்.

---

### தெரிவு

சொல்வதொன்று, செய்வதொன்றாக இருக்கின்றது. எல்லாம் முன்னுக்குப் பின் முரணாகவே உள்ளன. இந்த யோசனைகளையிட்டு நாம் எமது அதிருப்தியையும், ஆச்சரியத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்'' என்றும் அப் பேச்சாளர் தெரிவித்தார்.

---

### ஜே வி. பி.

ரென விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

பண்டாரவளை பொலிஸ் பொறுப்பதிகாரி ஆனந்த தற்போது சந்தேக நபரை தடுத்து வைத்து விசாரணை மேற்கொண்டு வருகிறார் என்றும் கூறப்படுகிறது.

---

### விமானம்

நடமாட்டம் நேற்று அதிகரித்துக் காணப்பட்டன.

நேற்று காலையில் இருந்து மாலைவரை அவ்ரோ விமானங்கள் அடிக்கடி பலாலி விமான நிலையம் சென்று இறங்கி ஏறியதைக் காணக் கூடியதாக இருந்தது.

---

### கட்டுநிதி

தப்பட்டது. இவ்வாறு இவ் வருட ஆரம்பத்தில் இருந்து

---

### இந்த

மனோதத்துவ நிபுணர்கள் தொழில் புரிகிறார்கள். ஆனால் இலங்கை முழுமைக்கும் 17 நிபுணர்களே உள்ளார்கள் என்றும்.

இலங்கையில் குற்றவியல் சட்டங்கள் நூறு வருடங்களுக்கு முன் இருந்த நிலையிலேயே இன்றும் உள்ளது. எந்த வித மாறுதலும் இல்லை ஆனால் உலகமும்மனோதத்துவமும் எவ்வளவோ மாறி விட்டன. இலங்கையில் பொதுசன அபிப்பிராயம் என்பதே இருப்பதாகத்தெரியவில்லை. பொதுசன அபிப்பிராயம் பலமுள்ளதாக இருந்தால் அரசின் அசட்டுத் தனத்தைப் போக்கி அரசைச் செயற்படவைக்கலாம் என்றார்.

மனோவியாதி பல துன்பங்களை இழைக்கலாம். அது ஒருவனின் அடிப்படைச் சுதந்திரத்தையே மறைத்து விடுகிறது மனோவியாதிக் காரனுக்குஅவனது சுதந்திரத்தைமீளவும் வழங்குவது மனோ வியாதிக்குச் சிகிச்சையளிக்கும் உள

## பாம்பு தீண்டி
## மரணம்

(வவுனியா)

கொடிய விஷப் பாம்பு தீண்டிய இளம் பெண் ஒருவர் வைத்திய வசதியின்மையால் மரணமானார்.

கோதண்டர் நொச்சிக்குளம் என்ற கிராமத்தைச் சேர்ந்த உலகநாதன் உதயலச்சுமி [18] என்பவரே நச்சுப் பாம்பினால் தீண்டப்பட்டு இறந்தவராவார்.

வன்னிப் பகுதிகளில் வைத்திய வசதியின்மையால் தொடர்ச்சியாக பல அநியாய மரணங்கள் நிகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது. [தி]

---

### வெள்ளைப்

கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சமூக சேவைகள் பணிப்

மேற்படி அமர்வு நடைபெறுகிறதென தெரிவிக்கப்படுகிறது. (21)

## நிவாரணம் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க பாவனையாளர்களுக்குரிய ஐப்பசி மாதத்திற்கான நிவாரண உலர் உணவுப் பொருள்கள் இன்று தொடக்கம் சங்க நிவாரண கிளைகளில் விநியோகிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (22)

தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் திருமதி திருலோகசுந்தரி காரியவாசம் அவர்களுக்கு அவசர வேண்டுகோள் ஒன்றையும் விடுத்துள்ளார்.

மேற்படி தகவல்களை ஊர்ஜிதம் செய்த சங்கத்தின் பொதுச் செயலாளர் இடமாற்றங்கள் சங்க நடவடிக்கைகளில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தப் போவதில்லையெனவும், சங்கமும் தானும், எதையும் எதிர்கொள்ளத் தயாராகவிருப்பதாகவும் தெரிவித்தார்

கமேர்ஷல் வங்கிக் காசாளர் குறையும் தொகையை முன்பு தவணை முறையிலேயே செலுத்தி வந்தனர். வங்கி நிர்வாகத்தின் இந்தப் புதிய உத்தரவு வழமையான நடைமுறைகளுக்கு மாறானது என்றும், வங்கி நிர்வாகத்தின் இந்த உத்தரவுக்குப் பணிவதானால் வங்கிக் காசாளர்கள் தமது சொத்தை விற்று அல்லேயே தாம் இந்த முடிவை மேற்கொண்டிருப்பதாக ஊழியர் சங்கம் மேலும் தெரிவிக்கின்றது.

கொழும்பில் கமேர்ஷல் வங்கி ஊழியர்கள் மற்ற நிறுவனங்களுடனான உதைபந்தாட்டம், வலைப் பந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றாது பகிஷ்கரித்து வருகின்றனர்.

## கிளிநொச்சி விவசாயிகளுக்கு திருந்திய நெல்லின விதைகள்

(கிளிநொச்சி)

திருந்திய நெல் இனங்கள், சிறுதானிய பயிர் விதைகள், மரக்கறி விதைகள் என்பவற்றை பெற்று விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

கிளிநொச்சியில் தற்போது பெரும்போக நெல்விதைப்பு தொடங்கியிருப்பதால் மூன்று, மூன்றரை மாத திருந்திய நெல் இனங்கள், மற்றும் விதைகள் என்பன ஹிங்ராங்கொட, கன்னொறுவ போன்ற விதைப் பண்ணைகளிலிருந்து தருவிக்கப்பட்டு கரைச்சி கமநல சேவை நிலையத்தில் வைத்து விற்பனை செய்யப்படுகின்றன.

இதனைப் பெற விரும்பும் விவசாயிகள் உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி உதவி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) முயற்சியினால் இவை எடுத்துவரப்பட்டுள்ளமைகுறிப்பிடத்தக்கது (16)

### போட்டி

இதற்குப் பதிலளித்த கல்விப் பணிப்பாளர் இரா சுந்தரலிங்கம்,

இப்போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை நூற்று ஐம்பது பேருக்கு அதிகமாக இருப்பின் பரீட்சை ஆணையாளருடன் தொடர்பு கொண்டு யாழ். மாவட்டத்தில் நடாத்ததான் முயற்சி செய்யலாமென தெரிவித்துள்ளார். (பா)

## பெற்றுக் கொள்ளவும்

பாலசுப்பிரமணியம் உதயேந்திரன் குடியிருப்பு வவுனியா என்பவருடைய தேசிய அடையாள அட்டை வீதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் 'ஈழநாதம்' காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

ஜே வி. பி. ரென விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

பண்டாரவளை பொலிஸ் பொறுப்பதிகாரி ஆனந்த தற்போது சந்தேக நபரை தடுத்து வைத்து விசாரணை மேற்கொண்டு வருகிறார் என்றும் கூறப்படுகிறது.

### விமானம்

நடமாட்டம் நேற்று அதிகரித்துக் காணப்பட்டன.

நேற்று காலையில் இருந்து மாலைவரை அவ்ரோ விமானங்கள் அடிக்கடி பலாலி விமான நிலையம் சென்று இறங்கி ஏறியதைக் காணக் கூடியதாக இருந்தது.

### கட்டுநிதி

தப்பட்டது. இவ்வாறு இவ்வருட ஆரம்பத்தில் இருந்து சுமார் முப்பது கோடி ரூபா யாழ். மாவட்டத்தின் அரச நிர்வாகத்திற்காகச் செலவிடப்பட்டது. பதிலுக்கு திறைசேரியினால் இம் மாவட்டத்திற்கு வழங்கப்பட வேண்டிய கட்டுநிதி அத்தியாவசிய சேவை ஆணையாளருக்கு வழங்கப்பட்டது. யாழ். மாவட்டத்திற்கு உணவுப் பொருள்களை அனுப்பியதன் பேரில் இப்பணத்தை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் பெற்றுக்கொண்டிருக்கிறார்.

தற்பொழுது குடாநாட்டுக்கு உணவுப் பொருள்களை அனுப்பி வைப்பதற்கு முன் கூட்டியே பணம் செலுத்த வேண்டும் என்று அத்தியாவசிய சேவைகள்ஆணையாளர் புதிய நிபந்தனை ஒன்றை விதித்துள்ளார். இந்த நிபந்தனையை ஏற்றுக் கொண்ட யாழ். செயலகம் அத்தியாவசிய உணவுப் பொருள்களை விற்பனை செய்தமையால் பெறப்பட்ட பணத்தை இம் மாவட்டத்திற்கான கட்டுநிதியாக பயன்படுத்த முடியவில்லை. உணவுப் பொருள்களைப் பெறுவதற்கான முற் பணமாகவே இவ்வாறு பெறப்படும் பணத்தை பயன்படுத்த வேண்டியுள்ளது. இவ்வாறு ஏற்கனவே சுமார் 36 மில்லியன் ரூபா முற்பணமாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருக்கு செலுத்தப்பட்டிருக்கிறது.

இதனால் இம்மாவட்டத்திற்கான நிர்வாகச் செலவுக்குப் பயன்படுத்தப்படும் கட்டு நிதியைப் பெறுவதற்கு திறைசேரியையே நம்பியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

வழமைபோலதிறைசேரியிடமிருந்து கட்டுநிதியைப் பெற்றுக்கொள்வதில் நீண்டகால தாமதத்தை தோற்றுவிக்கும் இதனால் இம் மாவட்டத்திற்கான அரச நிர்வாகத்தை தொடர்ந்தும் இயங்கச் செய்வது என்பது பெரும் சிரமமான விடயம். இந்தநிலை தொடர்ந்தும் நீடிக்குமானால் இம் மாவட்டத்தில் அரசநிர்வாகம் ஸ்தம்பிதமடையும். [க]

கள் என்றும்,

இலங்கையில் குற்றவியல் சட்டங்கள் நூறு வருடங்களுக்கு முன் இருந்த நிலையிலேயே இன்றும் உள்ளது. எந்த வித மாறுதலும் இல்லை ஆனால் உலகமும்மனோதத்துவமும் எவ்வளவோ மாறி விட்டன. இலங்கையில் பொதுசன அபிப்பிராயம் என்பதே இருப்பதாகத்தெரியவில்லை. பொதுசன அபிப்பிராயம் பலமுள்ளதாக இருந்தால் அரசின் அசட்டுத் தனத்தைப் போக்கி அரசைச் செயற்படவைக்கலாம் என்றார்.

மனோவியாதி பல துன்பங்களை இழைக்கலாம். அது ஒருவனின் அடிப்படைச் சுதந்திரத்தையே மறைத்து விடுகிறது மனோவியாதிக் காரனுக்குஅவனது சுதந்திரத்தைமீளவும் வழங்குவது மனோ வியாதிக்குச் சிகிச்சையளிக்கும் உளவள வைத்தியர்களின் கடமையாகும் என்று அவர் மேலும் கூறினார்.

## பாம்பு தீண்டி மரணம்

(வவுனியா)

கொடிய விஷப் பாம்பு தீண்டிய இளம் பெண் ஒருவர் வைத்திய வசதியின்மையால் மரணமானார்.

கோதண்டர் நொச்சிக்குளம் என்ற கிராமத்தைச் சேர்ந்த உலகநாதன் உதயலச்சுமி [18] என்பவரே நச்சுப் பாம்பினால் தீண்டப்பட்டு இறந்தவராவார்.

வன்னிப் பகுதிகளில் வைத்திய வசதியின்மையால் தொடர்ச்சியாக பல அநியாய மரணங்கள் நிகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது. [தி]

### வெள்ளைப்

கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சமூக சேவைகள் பணிப்பாளர் திருமதி க. சிவசிதம்பரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

---

வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

## கல்வியாண்டு 93 / 94

இலங்கைப் பல்கலைக் கழகங்களின் வெளிவாரிப்பட்டப்பாட நெறிகளான;

★ கலைமாணி [B. A.]

★ விஞ்ஞானமாணி [B.Sc]
(புள்ளிவிபரவியல்)

★ வணிகமாணி [B.Com]

க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம் விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

விபரங்களுக்கு
உதவிப்பதிவாளர்
**பட்டப் படிப்புகள் கல்லூரி,**
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:- பேராதனைப் பல்கலைக்கழகத்தால் இதுவரை விண்ணப்பங்கள் கோரப்படவில்லை என்பதை மாணவர்களுக்கு அறியத்தருகின்றோம்.

(சி/5240)

---

## விசேட அறிவித்தல்

சீமெந்து கட்டிட தொழிலாளர் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் தமது சந்தாப் பணத்தைத் தலைமை அலுவலக பொருளாளரிடமோ அல்லது கிளை அலுவலகங்களின் பொருளாளரிடமோ ஒப்படைத்து உடன் பற்றுச்சீட்டு பெற்றுக் கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர். இன்று தொடக்கம் தொடர்பாளர்களிடமோ அல்லது வேறு எவரிடமோ கொடுக்கும் பணத்திற்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல என்பதை இத்தால் அறியத் தருகிறோம்.

குறிப்பு: இதுவரை எமது அங்கத்தவர்களின் சந்தாப் பணத்தை வசூலித்த தொடர்பாளர்கள் மற்றும் அனுமதி பெற்றவர்கள் 21-10-92-க்கு முன் தலைமை அலுவலகத்தில் ஒப்படைத்துப் பற்றுச்சீட்டு பெற்றுக் கொள்ளவும்.

**சீமெந்து கட்டிட தொழிலாளர் சங்கம்,**
இல. 10, ஐயனார் கோவில் வீதி,
யாழ்ப்பாணம். (3485)

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு :
24
—
12
—
1971

வீரச்சாவு
18
—
10
—
1990

## வீரவேங்கை ஜெனி

(சின்னப்பெடியன் ஜெகதீஸ்வரன்)

சீறி வந்த சிங்கள இராணுவத்தை
சிதறி ஓட வைத்தவனே
சினம் கொண்ட வேங்கையாக
களத்திடை புகுந்தவனே — நீ
சிந்திய குருதியில் இங்கொரு
காலை விடியும்.

- குடும்பத்தினர்

கைதடி தெற்கு,
கைதடி.

(3487)

---

சுவைத்து மகிழ்ந்திட

ரேஸ்ரியின்

புதிய தயாரிப்புக்கள்

KIDDIES SPECIAL

FRUIT CHOCOLATE

ஒவ்வொன்றிலுள்ளும்
அழகிய ஸ்ரிக்கர்கள்

**TASTE LINE INDUSTRIES**
**(PVT) Ltd,**
14, SEENIOR LANE,
JAFFNA.

(சி-5238)

---

## உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்

### 17-10-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்; 6152

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:

28-732, 27-4019, 40-2249, 27-4289, 42-728 26-9797,
28-6546, 28-8951, 28-3667, 27-922, 27-6024, 24-3594,
24-5958, 24-6161, 24-8429, 26-923, 42-1046 27-5775,
41-8587, 27-6439, 28-9259, 40-1788, 26-8674, 24-5961.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:

27-2084, 26-9201, 26-535, 41-2509, 24-1922, 26-3126,
28-4381, 41-7109, 29-9416, 24-8558, 42-9112, 28-1262,
26-3206, 24-4707, 24-9938, 41-9663, 28-3969, 24-4854,
27-5482, 27-1292, 26-2493.

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு டோபர் மாதம் 18ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது